முகவரி தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான
ஒரே இடம்:
மிதுஷா
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு
நம்பிக்கையான இடம்:
மிதுஷா
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 09 திங்கட்கிழமை (21 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 86

# இலங்கை - இந்திய உறவில் முறுகல்!

## தமிழக மீனவர்கள் மீதான சூட்டு சம்பவத்தின் எதிரொலி

கொழும்பு, பெப்ரவரி 21

நேற்று முன்தினம் கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு மீனவர்கள் உயிரிழந்ததை அடுத்து —

இந்திய – இலங்கை அரசுகளுக்கு இடையிலான ராஜீக உறவுகளில் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

மேற்படி சூட்டுச் சம்பவத்தில் மற்றும் ஐந்து மீனவர்கள் காயமுற்றனர்.

ஒரு வாரத்தில் இடம்பெற்ற— இத்தகைய— இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இச்சம்பவம் தமிழகத்தில் பெரும் உணர்வலைகளைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வரும்— ஸ்ரீலங்கா கடற்படையினரின்— இத்தகைய தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் மீது சூடு

## ஸ்ரீலங்கா கடற்படை மீது கொலை முயற்சி வழக்கு!

கச்சதீவுக்கு அருகே இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்தே இரு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும்—

இதன்காரணமாக இலங்கைக் கடற்படை மீது கொலை முயற்சி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சென்னைப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் அதிகாலை ஏழு இந்திய மீனவர்கள் சென்று கொண்டிருந்த படகு ஒன்றின் மீது கச்சதீவுக்கு அருகே வைத்து ஸ்ரீலங்காக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

காயமடைந்த மீனவர் ஒருவர் மதுரை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

இலங்கைக் கடற்படையினர் சுட்டு இரண்டு மீனவர்கள் பலியான சம்பவத்தைக் கண்டித்து மதுரையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

50 பெண்கள் வரையில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் மதுரை நகரில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## ஜனாதிபதி - பிரதமர் ரணில் இடையே கருத்து முரண்பாடு

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே கருத்து முரண்பாடு நிலவுவதாக 'ராவய' சிங்கள வார இதழின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

சிங்கள வாக்குகளைப் பெறுவதற்காக ஜனாதிபதி விஜேதுங்கா போர்ப்பறை அறைகிறார். மறுபுறத்தில் உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பிரியராக வேடம் தாங்குகிறார்.

இவ்வாறு இவர்கள் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என அபிப்பிராயம் நிலவுகின்ற போதிலும், அவர்களிடையேயும் கருத்து முரண்பாடு காணப்படுகிறது.

காமினி திஸநாயக்காவின் மைத்துனரான கனாநிதி விக்கிரமவீரசூரியாவை ஜனாதிபதியின் ஆலோசகர் பதவிக்கு நியமிக்க டி.பி முதலில் திட்டமிட்டார். ஆனால் ஐ.தே.கவில் உள்ள பிரேமதாஸா ஆதரவாளர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்ததால் அத்திட்டத்தைச் செயற்படுத்துவதை டி.பி. அப்போது தள்ளிவைத்தார்.

ஆனால் அத் திட்டத்தை செயற்படுத்த ஜனாதிபதி முடிவு செய்திருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கட்சியில் பிரேமா ஆதரவாளர்கள் பலமிழந்து வருகையில் காமினி அணியின் செல்வாக்கு கூடி வருகிறது.

காமினியின் மைத்துனர் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுவிட்டால், கட்சிச் செயலாளர் சிறிசேன கூரே, பிரதமர் ரணில் ஆகியோரைவிட காமினியே ஜனாதிபதிக்கு நெருக்கமானவர் ஆக மாறிவிடுவார்.

மேலும் காமினியுடன் அவரது ஐ. தே. மு. கட்சியில் கனாநிதி விக்கிரம வீரசூரிய இருந்த போது —

பிரேமதாஸா, அத்துலத்முதலி ஆகியோர் கொலையுண்டதற்கு சிறிசேன கூரே மீது கொலைக் குற்றம் சுமத்தி வீரசூரிய பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானை இந்துவில் இராணுவ முகாம் அமையாது

### டி. பி. விஜேதுங்க உத்தரவு

கொழும்பு, பெப். 21

இரத்மலானை இந்துக் கல்லூரியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பனாகொட இராணுவ முகாம் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேல்மாகாண ஆளுநரும், முன்னாள் பிரதம நீதியரசருமான திரு. எஸ். சர்வானந்தாவும், ஜனாதிபதியின் செயலாளர் திரு. எச். ஜே. விஜயதாசாவும் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இரத்மலானை இந்துக் கல்லூரியை இராணுவ முகாமாக மாற்ற இராணுவ அதிகாரிகள் அண்மையில் முயற்சி எடுத்ததை அடுத்து அதற்கு பலதரப்பிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை —

இரத்மலானை இந்துக் கல்லூரியில் அமைக்கப்படவிருந்த முகாமை அதற்கு அருகில் உள்ள இளைஞர் விவகார அமைச்சுக்குச் சொந்தமான வளவிலே அமைக்க ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார். (த-5-162)

## சோளத்திலிருந்து 'ஈஸ்ட்'! வடக்கில் முயற்சி வெற்றி!!

யாழ்ப்பாணம், பெப். 21

பாண் தயாரிப்பதற்கு தேவையான 'ஈஸ்ட்'டை சோளத்தில் இருந்து தயாரிப்பது தொடர்பாக யாழ். மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

''ஈஸ்ட்'' முழுமையாக தெற்கில் இருந்தே இங்கு எடுத்து வரப்படுவதால், அதை இங்கு தயாரிக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும் —

அரிசி, சோளம் ஆகியவற்றில் இருந்து திரவ ''குளுக்கோஸ்'' தயாரிக்கும் முயற்சி ஏற்கனவே வெற்றி பெற்றிருப்பது தெரிந்ததே. அந்தத் திரவ குளுக்கோஸிலிருந்து ''ஈஸ்ட்'' தயாரிப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வே இப்போது வெற்றியடைந்திருப்பதாக யாழ். மருத்துவ பீட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## 'குவன் பிரகார' நடவடிக்கை கட்டுவனில் இடம்பெற்றதாம்

### இராணுவ பேச்சாளர் சொல்கிறார்

தெல்லிப்பளை தெற்கு, கட்டுவன் பகுதியில் 'குவன் பிரகார' என்று பெயரிடப்பட்ட சிறிய அளவிலான விமானத் தாக்குதல் நடவடிக்கை கடந்த வியாழன் அன்று மேற்கொள்ளப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தோ அல்லது யுத்த நிறுத்தம் குறித்தோ எமக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார் என்று அரசசார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த-165)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 25 புதிய டாக்டர்கள்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் பயிலுநர் டாக்டர்கள் 25 பேர் நியமனம் பெறவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து இவ்வருடம் வெளியேறும் டாக்டர்களில் 25 பேரே யாழ். ஆஸ்பத்திரிக்கு நியமனம் பெறுகிறார்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு சித்தியடைந்துள்ள 45 டாக்டர்களின் விவரங்கள் சுகாதார அமைச்சுக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் —

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தெரிவு செய்யப்படுபவர்களின் விவரம் விரைவில் இங்கு கிடைக்கும் எனவும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதே வேளை—யாழ். ஆஸ்பத்திரியில் தற்பொழுது பயிலுநர் டாக்டர்களாகப் பணிபுரிந்து வரும் 25 பேருக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை-இந்தியப் படைகள் கடலில் கூட்டாக ரோந்து

### வாழப்பாடியின் ஆலோசனை இது!

இலங்கை — இந்திய கடற்படைகள் கூட்டாக இந்திய இலங்கை கடற்பரப்பில் ரோந்து செய்ய வேண்டும்.

— இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று மதுரையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினர் தொடர்ந்து இந்திய மீனவரை தாக்கி வருவதிலிருந்து இந்திய மீனவரைக் காப்பாற்ற இந்த கூட்டு ரோந்து ஒன்று தான் தீர்வாக அமையும் என்றும் வாழப்பாடி தெரிவித்தார். (உ-9)

## இலங்கை மீனவர்களை இந்திய மீனவர் தாக்கினராம்

### பேருவளைப் பொலீஸில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 21

பாக்கு நீரிணையை அண்டிய கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர்களை இந்திய மீனவர்கள் தாக்கி அவர்களிடமிருந்து 5 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் மீன்களை அபகரித்துச் சென்றுள்ளதாக பேருவளை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாந்த பெர்னாண்டோ என்ற மீனவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

பிரஸ்தாப மீனவரும் வேறு நாலுபேரும் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகு இந்தியக் கரைக்கு சமீபமாகச் சென்றபோது, 'சிலுவியா' என்ற படகில் வந்த இந்திய மீனவர்கள் 7 பேர் அவர்களைத் தாக்கியதாகவும், பொருள்களை அபகரித்துச் சென்றதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-162)

## கொழும்பு நகரில் தினமும் சுற்றி வளைப்பு; தேடுதல்!

கொழும்பு நகரில் தினமும் ஏதாவது ஓர் இடத்தில் சுற்றி வளைப்பும் தேடுதல் நடவடிக்கைகளும் இடம் பெற்று தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவம் காவலுக்கு நிற்க பொலீஸார் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தி வருகின்றனர். அத்துடன் முப்படையினரும் பொலீஸாரும் தனித்தனியான பாதைத் தடைகளை ஏற்படுத்தி தமிழர்களைக் கைது செய்து வருகின்றனர்.

இதனால் நகரில் உள்ள சைவ ஹோட்டல்கள், கடைகள் ஆகியவற்றில் வேலையாட்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தொண்டமான் ஒப்பமிடும் காசோலை மாற்றத் தடை!

### செல்லா மனு மீது இடைக்கால உத்தரவு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இலங்கை வங்கி கணக்குத் தொடர்பாக, அதன் தலைவர் எஸ். தொண்டமான் கையெழுத்திட்டு வழங்கும் காசோலைகளை இம்மாதம் 24 ஆம் திகதி வரை மாற்றிக் கொடுக்கக் கூடாது எனத் தெரிவித்து இலங்கை வங்கியின் மேல்மாகாண வடபிராந்திய அலுவலகத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கிறது.

இ. தொ. காவின் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தாக்கல் செய்த மனு ஒன்று தொடர்பாக கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ஏ. எம். சோமவன்ஸ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (உ-162)

## நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகருக்கு அறிவிப்பு

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் கடந்த வாரம் சபாநாயகர் எம். எச். முகம்மதுவிடம் கையளிக்கப்பட்டது.

முன்னைய சந்தர்ப்பங்களில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது 'ஐ. தே. க — இ. தொ. கா அரசு' என்றே அதில் எதிர்க்கட்சிகளால் குறிப்பிடப்பட்டது ஆனால் இந்தத் தடவை இ. தொ. காவை குறிப்பிடக் கூடாது என தமிழ்க் கட்சி எம். பிக்கள் சிலர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அறியவருகிறது.

தென் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-3 5-162)

## பாக். தூதரக நடவடிக்கை: இலங்கையிடம் ஆட்சேபம்

### இந்தியத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

காஷ்மீர் நெருக்கடி தொடர்பாக இலங்கையில் உள்ள பாகிஸ்தான் நாட்டு தூதரகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சிடம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. நரேஷ்வர் தயாள் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய ஏஜெண்டுகள் ஊடுருவுவதற்கான இன்னொருமையமாக கொழும்பு மாறுவதை தடுப்பதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய புலனாய்வுச் சேவையினால் பயிற்சி அளிக்கப்பட்ட பேர்வழிகள் நேபாளத் தலைநகர் காத்மண்டு, பங்களாதேஷ் தலைநகர் டாக்கா ஆகிய நகரங்கள் ஊடாக ஊடுருவுவது குறித்து அண்மையில் இந்தியா கடும் விசனம் வெளியிட்டிருந்தது.

மூன்றாவது நாட்டின் பிரஜை ஒருவர் இலங்கையில் இருந்து இந்தியா வர விரும்பினால் அவரது சொந்த நாட்டில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக அவரது நடவடிக்கைகள் பற்றி அறிந்து ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




ஆனைக் கட்சிக்காரர் குழம்பிப் போய் இருப்பது மட்டும் ... என்ன குழப்பமோ ...!

## தெற்கு விலைக்கு பொருள்களை தர முடியாவிடில் வெளியேறுங்கள்

### யாழ். மக்கள் சார்பில அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 21

வடக்கு-கிழக்கு மாகாணம் இலங்கையின் ஒரு பகுதி தான் என்று அரசு ஏற்றுக்கொண்டால், வடக்கு மீதான பொருளாதார போக்குவரத்துத் தடைகளை நீக்கி —

இங்குள்ள மக்களும் தென்னிலங்கை மக்கள் வாங்கும் விலைகளுக்கே பொருள்களை பெற நடவடிக்கை எடுக்கட்டும்.

அதனைச் செய்ய இயலாது போனால் அரசு எமது மண்ணில் இருந்து தமது பரிவாரங்களுடன் வெளியேற வேண்டும் என்றே தமிழ் மக்கள் பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்.

யாழ். குடாநாட்டுக்கு அரசு அனுப்பும் உணவுப் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை மக்களே செலுத்த வேண்டும் என்ற அரசின் முடிவைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஏற்கனவே பொருளாதாரத் தடை என்ற கோரப்பிடியில் இருந்து தம்மை மீட்டெடுக்க முடியாத மக்களிடம் கப்பல் கூலி என்ற போர்வையில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

றோணியோ இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகராச் சந்திக்கு அருகில்). (6875)

நல்லின சைனா பாண்டெயில் புறாக்கள், ஒரு லேடீஸ் சைக்கிள் (R M I.) ஒரு சோடி உழவு மாடுகள், ஒரு சிறிய (24x1½) சைக்கிள் விற்பனைக்குண்டு. நடராசா, ராஜ் ஜோபாக்ஸ் ஸ்டோர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (29546)

### கோழிக்குஞ்சுகள்

Hy - Line Brown, Hy-Line white, லைலைன் பிறவுன், லைலைன் வெள்ளை, பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 999 வெளிநாட்டு மீன் தூள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் 21-2-94 கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29525)

### எண் ஜோதிடம்

ஒவ்வொருவருக்கும் வழங்கப்பெறும் பெயரே நன்மை தீமைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும். அபூர்வ சக்தி வாய்ந்தவை, குழந்தைகளுக்கு சூட்டும் பெயரே எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கின்றது. வளர்ந்தோரின், தொழில் ஸ்தாபனங்களின் பெயர்களும் அதிர்ஷ்டகரமானவா? என்பதை அறிய சிரமைத்துக்கொள்ளவும் மற்றும் பலன்கள் விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. - வெளியீடு ஸ்ரீவாணி. (6980)

### தேவை

ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. திறமையும் அனுபவமும் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வடமராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல: 616, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29548)

### மணமகன் தேவை

யாழ். இந்து 25 வயது நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, 5'-3" உயரமுள்ள, வேம்படியில் படித்து A/L சித்தியடைந்த, Diploma [Computer Studies] செய்த அழகான பெண்ணுக்கு இலங்கையில் / வெளிநாட்டில் வேலைபார்க்கும் உயர்கல்வியுடைய மணமகன் தேவை. ஜாதகக்குறிப்பு, முழு விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். 613, மே/பா உதயன். (29500)

## ஐ. நா. தூதரகம் பரிசீலனை

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக அகதிகளுக்கான அமெரிக்க ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5-162)

## இலங்கை வென்றது

இந்தியா — இலங்கை அணிகளுக்கு இடையில் ஜலந்தரில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 4 விக்கட்டுக்களினால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப்பெற்றது.

தொடர்ந்து பெய்த மழையால் ஆட்ட நேரம் குறைக்கப்பட்டதுடன், 32 ஓவர்களில் 141 ஓட்டங்கள் என்ற நிலைக்கு ஆட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இலங்கை 6 விக்கட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

முதல் இரண்டு ஒரு நாள் போட்டிகளிலும் இந்தியா வெற்றியீட்டியது தெரிந்ததே,

---

## வட இலங்கை நுண்கலை மன்றம்
## தேர்வு - 1993 நேரசூசி

தரம் 1, 2, 3, 4 அனுமதி அட்டையில் காட்டிய ஒழுங்கில் 25-02-94 வெள்ளிக்கிழமை தொடங்கும். அதே தினங்களில் ஆசிரியர் தரத் தேர்வுகளும் தொடங்கும்.

வேம்படி மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் 1 யாழ். மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. மண்டப இல. 2, வேம்படி மகளிர் கல்லூரியிலேயே நடைபெறும்.

இ. சிவானந்தன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வித் திணைக்களம்;

(சி-7205)

---

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்
## 14ஆவது இசைவிழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி
நல்லூர்.

### பத்தாம் நாள் - இன்று

சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
எம். ரமணன், ஆர். சிவசாமி — நாதஸ்வரம்
வீ. பாபு, எஸ். ரஞ்சன் — தவில்

**5-00 — 5-10** மிருதங்க இசை
கே. சுரேஷ், பி. சதீஷ், கே. நந்தகுமார், பி. பாலகுமார்

**5-10 — 5-30** பாட்டு
பி. குமரேஷ், பி. சுரேகா, பி. சுதர்ஷா — பாட்டு
எஸ். சிவகலா — வயலின்
கே. சஜன் — மிருதங்கம்

**5-30 — 5-50** வீணை, வயலினிசை
ஜெ. சிவசக்தி, சி. வித்தியலட்சுமி, ச. சறோஜினி, அ. பிரியதர்ஷினி — வீணை
சி. சுவர்ணலட்சுமி, ஜெ. சிவச்செல்வி — வயலின்
ம. ரதிரூபன் — மிருதங்கம்

**5-50 — 6-15** பாட்டு
கே. சுதர்சனி — பாட்டு
எஸ். சிவகலா — வயலின்
எம். சுஜன் — மிருதங்கம்

**6-15 — 6-45** பாட்டு
துஷ்யந்தி சிவனேசன் — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

**6-45 — 7-30** பாட்டு
பிரசாந்தி ராமச்சந்திரன் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-30 — 8-00** மங்கள விளக்கேற்றல்
திரு. மா. செல்வராஜா (தலைவர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. ச.)
திரு. மா. புலேந்திரன் (தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. ச.)
திரு. கி. கணேசராசா (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி)
திரு. க. தவரூபன் (மூபன் எரிபொருள் நிலையம், திருநெல்வேலி)

தலைவர்:
திரு. வை. செந்திநாதன் (தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை) (சங்கானை, ப. நோ. கூ. சங்கம்)

பிரதம விருந்தினர்:
திரு. பீ. வைத்திலிங்கம் (பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்:
திரு. வே. சிற்சபேசன் (தலைவர், வர்த்தக சங்கம், யாழ்.)
திரு. த. அன்னலிங்கம் (செயலாளர், வர்த்தக சங்கம் யாழ்.)

**8-00 — 9-00** வயலின் இசை
சாந்தநாயகி சுப்ரமணியம் — வயலின்
எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — கடம்

**9-00 — 10-00** பரதநாட்டியம்
''இலக நர்த்தனாலய மாணவிகள்''
தயாரிப்பு: யசோதரா விவேகானந்தன்

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்!
**R. V. G. பீடி ஸ்தாபனம்**
நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

---

## ஊரெழு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயம்
## 14ஆம் திருவிழா

(21 — 02 — 1994 இன்று மாலை 6-30 மணிக்கு)

சொற்பொழிவு:
செல்வன் எஸ். மணிமாறன்
(அகில இலங்கை கம்பன் கழக இளம் பேச்சாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. ச. நாகலிங்கம்,
விழா உபயகாரர்.

[29545]

---

## பொது மக்களுக்கான அறிவித்தல்

1. யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல இறைச்சிக் கடைகளிலும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, முத்திரையிடப்பட்ட இறைச்சி விற்பனைக்காக இருத்தல் வேண்டும்.
2. மிருகங்களை வீடுகளில் வைத்து வெட்டிப் பங்கு போட்டு இறைச்சியைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தலாகாது.
3. ஏதேனும் கொண்டாட்டத்திற்கு மிருகங்களை வீட்டில் வைத்து வெட்டவேண்டியிருப்பின் உரிய அத்தாட்சியுடன் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராவது எம்முடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. இவற்றை மீறிச் செயல்படுவோர் மீது ''கசாப்புச் சட்டத்திற்கு அமைய'' நடவடிக்கை எடுக்கப்படும்.
5. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை எமது அலுவலகத்திலோ, யாழ். மாநகரசபை உணவுப் பரிசோதகரிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்

(சி/7257)

---

## கண்ணீர் அஞ்சலி

கலாநிதி
### நாவற்குழியூர் நடராசன்

யாழ். மறுமலர்ச்சிச் சங்க அமைப்பாளருள் ஒருவரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதி முன்னைநாள் பணிப்பாளரும், சிறந்த கல்விமானும், ஈழந்தந்த தலைசிறந்த கவிஞரும், பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரும். நாவற்குழி மகாவித்தியாலயத்திற்குச் சிறந்ததொரு திறந்த வெளியரங்கினை உருவாக்கித்தந்த வள்ளலுமான அன்னார் கனடாவில் காலமானார் என்ற செய்தி அறிந்து கலங்குகிறோம். அவர் பிரிவால் கலங்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்.

— நாவற்குழியூர் மக்கள்.

(29547)

---

## 6ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு: 08 — 12 — 1973



உதிர்வு: 27 — 08 — 1993

### செல்வன் செல்லத்துரை திசரூபன்
(யாழ் மத்தியகல்லூரி மாணவன் - 6ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

திதி: 21 - 02 - 1994 திங்கட்கிழமை

எம் குடும்பச் சோலைதனில் பெண்பூக்கள் நான்கின்பின்
ஐந்தாவதாய் மலர்ந்த அற்புதனே திசரூபா!
மத்தியத்தின் மாணவனாய்க் கல்வியிலே துறைபோனாய்
கன்னியத்தின் ஒருமகனாய்க் கண்டோரால் வாழ்த்துற்றாய்
எந்த பொழுதிலும் பெரியவர்க்கும் வணை வாழ்த்தாய்
'பிரான்ஸ்' நாடு உந்தனுக்குச் சுடுகாடாய் மாறியதேன்?
வந்துவிடு எம்மிடையே மீண்டும் நீ வந்துவிடு
வாடிக்கிடக்கும் எம் சோலை வளம் பெறவே
வாசமுள்ள பூவாய் நீ வந்துவிடு

பிரிவுத்துயரில் துடிக்கும்,
பெற்றோர், சகோதரிகள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
அருச்சுனன் மாமா

''ரஞ்சனாஸ் கபே''
65/2 பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(29550)

---

## அல்சேஷன் நாய் காணவில்லை

ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த, கறுப்பும் மஞ்சள் நிறமும் கலந்த, நான்கு வயது அல்சேஷன் ஆண் நாயை 18-02-1994 முதல் காணவில்லை. இது தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

ஆ. விஸ்வலிங்கம்,
235, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

(29549)

---

## தேவை

ரீ-ரச்சிங் (RE- TOUCHING) பினிசிங் (FINISHING) வேலை தெரிந்தவர்கள் புதன் கிழமை (23- 02- 94) காலை 10-00 மணிக்கு நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

**சித்ராலயா**
18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7249)

---

## திருமறைக் கலாமன்றம்
## ஆய்வரங்கு

பொருள்:
''வானொலி நாடகம்''

ஆய்வுரை:
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை அவர்கள்

இன்று (21 - 02 - 94) மாலை 5 மணிக்கு மன்ற கேட்போர் கூடத்தில்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச்செயலாளர்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7260]

---

## வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING

### புதிய பிரிவுகள் ஆரம்பம்:

வார நாள் வகுப்புக்கள்:
**25 - 02 - 1994**

வார இறுதி நாள் வகுப்புக்கள்:
**26 - 02 - 1994**

"WE MAKE IT BETTER"

★ இப்பயிற்சி நெறியில் BASIC Language (G. W. BASIC / B. Bc. BASIC) ஐ தெரிவு செய்யலாம்.
★ தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகு விரிவுரையும் குறைந்த மாத கட்டணமும்.
★ கூடிய செய்முறைப் பயிற்சியும் திறமையான மாணவர்களுக்கு விசேட பயிற்சிக் காலம்.

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

[சி-7258]

---

## நூலகவியல் வகுப்புகள்

### சித்திரையில் ஆரம்பம்

தேவைப்படும் தகைமைகள்:
க. பொ. த. உயர்தரத்தில் ஒரே அமர்வில் மூன்று பாட சித்தியும், சாதாரண தரத்தில் ஆங்கில பாட சித்தியும்.

நூலக ஊழியராயின்:
சாதாரண தரத்தில் ஒரே அமர்வில் ஆங்கிலம் உட்பட ஆறு பாட சித்தியும், மூன்று வருட அனுபவமும்.

25 - 03 - 1994க்கு முன் விண்ணப்பிக்கவும்

விவரங்களுக்கு:
கா. மாணிக்கவாசகர்,
**யாழ். மத்திய கல்லூரி.**

1993 முதல் வருடப் பரீட்சை மார்ச் 5 — 6 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

[29552]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தபாற்சேவை சீரழிகிறது!

தமிழர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைக் கேட்டு கடந்த நான்கு தசாப்தங்களாகப் போராடி வருகிறார்கள்.

இருபான்மையினரான இவர்களுக்கு உரிமைகளா? — என்ற கேள்வியுடன் போராட்டத்துக்குப் பழிவாங்கும் விதத்தில், வஞ்சம் தீர்க்கும் முறையில் சிங்கள அரசுகள் அவர்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றன.

அவற்றுக்கும் மேலாக, ''பயங்கரவாதத்தை'' ஒழிக்கிறோம். அதற்காக யுத்தம் நடத்துகிறோம் என்ற வெளிப் பேச்சுடன், தமிழர்களை மனிதர்களாகவே கருதாமல் அவர்களது அடிப்படை வாழ்வுரிமைகளைப் பறிக்கும் விதத்தில் அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் இப்போதைய சிங்கள அரசு போட்டு வருகிறது.

குறிப்பாக கடந்த மூன்றரை வருடங்களாக அவர்களின் அன்றாட வாழ்க்கையை சிரமிக்கும் நோக்குடன் உணவு, தொழில், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, தகவல் தொடர்பு ஆகிய அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாதவாறு தடைகளையும், கட்டுப்பாடுகளையும் இறுக்கி வருகிறது.

தபாற் சேவைத் தாமதமும் ஒருவித தடையே. தமிழர்களின் மனித அடிப்படையை உரிமையைப் பறிக்கும் நாசகாரச் செயலே. சர்வதேச தபால் விதிகளை மீறும் குற்றமே— என்று ஏற்கனவே இப்பத்தியில் மிகப் பல தடவைகள் ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஆனால் கொழும்பு அரசாங்கம் இன்னும் திருந்தியதாக இல்லை. அரசாங்கம் என்ற வகையில் குடாநாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை குறித்தோ, சர்வதேசக் கட்டுப்பாடு குறித்தோ எதனையும் சிந்தையில் சேர்த்ததாக இல்லை.

இத்தகைய நிலையில், யாழ்ப்பாணத்தில் இயங்கும் நற்சமூக நடுநிலையம் தபாற் சேவைச் சீர்குலைவு குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பிய கண்டன மகஜர்—

அரசின் வஞ்சம் தீர்க்கும் தனத்தை தமிழர்களை அந்நியர் போலக் கருதிச் செயற்படும் தன்மையை, தமிழர்கள் மீதான சித்திரவதையை மிக வெளிச்சப்படுத்திக்காட்டுகிறது.

சரியாக 103 நாள் இடைவெளியின் பின்னர் குடாநாட்டுக்கு வந்து சேர்ந்த கடிதங்களுக்கு நேர்ந்த கதி சொல்லி முடியாதது. அவற்றுள் இருந்த பெறுமதி மிக்க பணத்தையும் பொருள்களை மட்டுமா சிங்களப் படையினர் சுருட்டிக் கொண்டனர்? கடிதங்களை உடைத்தும், சிதைத்தும், உருக்குலைத்தும் உரிய தகவல்களை (பிந்தியேனும்) பெறுவதனை மட்டுமா தடுத்தார்கள்? ஒருவருக்குரிய கடிதத்தை அடுத்தவருக்குரிய விலாச உறையில் இட்டு பலரின் குடும்ப இரகசியங்களையும் அம்பலப்படுத்தி விட்டார்கள்!

பாதுகாப்புக் காரணம் என்று கூறி இவர்கள் ஒருவரின் வாழ்க்கையையும் உரிமையையுமா சிதைத்தார்கள்? குடும்பத் தகவல் அறியும் உரிமையைப் பறித்து லட்சக்கணக்கான தமிழர்களையல்லவா சித்திரவதை செய்திருக்கிறார்கள்! எத்தனையோ பேரின் வாழ்க்கை வாய்ப்புகளையும், முன்னேற்றங்களையும் தடுத்திருக்கிறார்கள்.

தபாற்பகுதி தனது மக்கள் கடமைகளை இராணுவத்திடம் அடகுவைத்துவிட்டது மேலும் வடக்கு மக்களை அரசு அந்நியராகக் கருதுகிறது. செயற்படுகிறது என்பதில் என்ன சந்தேகம்?

அதனை— தமிழர்கள் தனது பிரசைகள் அல்லர் என்பதனை — அரசு பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டு தமிழர்கள் தமக்கென ஓர் அரசை நிறுவ வழிவிட்டுக் கொடுத்தால் எல்லாத் தகராறுகளும் தாமாகவே அகலும். அதுவே இப்போதைய சிக்கல்களை நீக்குவதற்கான, ஒரேயொரு மாற்றுவழியுமாகும்!

# 2,500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்கள் வடக்கு - கிழக்கில் வாழ்ந்து வருகின்றனர்

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள மனித உரிமைகள் தொடர்பான ஐ. நா. ஆணைக்குழுவின் 50ஆவது கூட்டத்தொடரில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பல அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியான 17 அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கூட்டாகச் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி உள்ளதுடன் அவர்களுடைய சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பாக அமெரிக்காவின் கலிபோர்னியாவிலிருந்து இயங்குகின்ற ''Humaitarian Law Project International, Educational Development'' என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

கடந்த பல வருட காலமாக சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் இந்த நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இக்காலப்பகுதியில் பல நாடுகள் அந்நாட்டு மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் சுதந்திர நாடுகளாகியுள்ளன. குரோஷியா, சுலோவானியா, மசிடோனியா ஆகிய நாடுகளின் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையைக் கோரியிருப்பதுடன் சுதந்திரத்தையும் பெற்று பால்டிக் நாடுகளுடனும், முன்னாள் சோவியத் நாடுகளுடனும் இணைந்து கொண்டுள்ளதுடன் ஐ. நா. சபையிலும் உறுப்பு நாடுகளாகியுள்ளன. ஆரம்ப வருடங்களில் நோர்வே, பெல்ஜியம், கொரியா, ஒஸ்ரியா, போலந்து போன்ற நாடுகளும் இதே இலக்கை அடைந்துள்ளன.

''சகல மக்களுக்கும் சுயநிர்ணயத்திற்கான உரிமை உள்ளது'' என சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் இரண்டு பிரகடனங்கள் கூறுகின்றன. ''சகல என்ற சொல்லை மேலும் வலியுறுத்த எமது அமைப்பு விரும்புகின்றது. இந்தச் சொல் ஒரு சில மக்களை மட்டும் குறிப்பிடப் பயன்படுத்தப்படவில்லை. அதாவது அரசாங்கத்திற்கு ஆதரவானவர்களோ ஏனையவர்களோ இந்தச் சொல்லால் குறிப்பிடப்படவில்லை. இந்தச் சொல் வெள்ளையர்கள் மட்டுமோ அல்லது கிழக்கு ஐரோப்பியர்கள் மட்டுமோ இந்த உரிமையைக் கொண்டுள்ளார்கள் எனக் கூறவில்லை. இந்தச் சொல் தமது உரிமைகளுக்காகப் போரிடுபவர்களுக்கோ அல்லது போரிடாதவர்களுக்கோ உரியதெ னதையும் குறிப்பிடப்பயன்படுத்தப்படவில்லை.

சகலரும் என்ற சொல் சகலரையுமே குறிப்பிடுகின்றது. சட்ட அறிஞரான பேராசிரியர் சேனின் கருத்துப்படி சுயநிர்ணய உரிமை மனித கௌரவம் என்ற கோட்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு விடயமாகும். சுயநிர்ணய உரிமை ஜனநாயகம் என்ற நாணயத்தின் மறுபக்கம். சர்வதேச நீதிமன்றம் அதனுடைய மேற்கு சஹாரா வழக்கில் (ஐ. சி. ஜே. 1975 அறிக்கைகள்) ''மக்கள்'' என்பதன் அர்த்தத்தை அடையாளம் கண்டது. இதன் தேசிய அடையாளம் ஒரு அடையாளம் காணக்கூடிய பிரதேசத்துடன் தொடர்பானதாகவே இருந்தது.

உயர்வு தாழ்வைக் கவனிக்காத விதத்தில் சர்வதேச சமுதாயம் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளது. சுயநிர்ணய உரிமை பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மிரட்டலாகவுள்ளது என்ற குற்றச்சாட்டொன்றும் முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பாக அன்றி சக்கரோவின் விதவை மனைவி எலினா பன்னரின் கூற்றை நாம் ஆதரிக்கிறோம். பிரதேச ஒருமைப்பாடு என்ற கோட்பாடு சுதேசிய மக்களை ஒடுக்குவதற்கோ அல்லது அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை மறுப்பதற்கோ ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது.

சில தவறாக வழிநடத்தப்பட்ட அல்லது தவறான நபர்கள் அல்லது அரசாங்கங்கள் சுயநிர்ணய உரிமை நியாயமற்றது எனக் கூறுகின்றன. இலங்கையில் உள்ள நிலைமையும் பெருமளவில் பாகுபாடான பாரபட்சமான தொன்றாகவே உள்ளது. உண்மையில் தமிழர்கள் நியாயமற்றவர்கள் எனவும் இன அடிப்படையிலான ஆட்சிக்குள் விழுந்துவிட்டவர்கள் எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றார்கள். இதற்கான பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் முகமாகவும், இணக்கத்திற்கு இடம்கொடுக்காத இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் முகமாகவும் அரச சார்பற்ற 17 அமைப்புக்கள் பின்வரும் கூட்டறிக்கையை வெளியிடுகின்றன.

### கூட்டு அறிக்கை

இலங்கைத் தீவில் இடம்பெறும் ஆயுதப் பிணக்கும் மனிதாபிமானச் சிக்கல்கள் தொடர்ச்சியாக மீறப்படுவதும் எமக்கு ஆழமான தீவிரமான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

1987 மார்ச் மாதத்தில் இலங்கை தொடர்பான தீர்மானமொன்றை இவ் ஆணைக்குழு நிறைவேற்றியது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் சர்வதேச

## 17 சர்வதேச தொண்டர் அமைப்புகள் ஐ. நா மனித உரிமை குழுவுக்கு அறிக்கை

ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனிதாபிமான சட்டங்களின் பிரமாணங்களுக்கு பூரண மதிப்புக் கொடுக்கவேண்டும் என இத்தீர்மானத்தில் கோரப்பட்டது.

ஆறு வருடங்களின் பின்னர் 1993 பெப்ரவரியில், இவ் ஆணைக்குழுவின் 49 கூட்டத்தொடரில் அரச சார்பற்ற 15 அமைப்புக்கள் வெளியிட்ட கூட்டறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. ''இத்தீவின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாகத் தெரிவுசெய்யும் அந்தஸ்தைக் கொண்டுள்ளவர்கள் என்பது அங்கீகரிக்கப்படுவதுடன், அவ்வாறான அங்கீகாரம் பல மனித உயிர்களை பலியாக்கி பாதிப்புக்களை ஏற்படுத்தி வரும் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான அடிப்படையையும் வழங்குவதாக இருக்கவேண்டும்.

ஆனால் இன்று ஒரு வருட காலத்தின் பின்னர், தமிழர் தாயகத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை தொடர்கிறது. அத்துடன் தமிழ்ப் பொதுமக்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் இலங்கை ஆயுதப்படைகளின் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகின்றனர். தமிழர் தாயகத்தின் மீதான இந்தத் தாக்குதல் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதி ஒரு அரசியல் நிர்வாகப் பிரிவாக இருப்பதை எதிர்ப்பதென்ற இலங்கை அரசாங்கத்தின் பிரகடனத்துடன் இரட்டிப்பாகியது. இரண்டு வருடகாலமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைப்பதில் தோல்வியடைந்துவிட்டது. நோபல் பரிசு பெற்ற நால்வரால் 1993 ஆகஸ்ட்டில் முன்வைக்கப்பட்ட சமாதானத் திட்டம் இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இதற்கு மேலாக ''இந்நாட்டில் இனப்பிரச்சினை எதுவும் இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றே உள்ளது'' என ஜனாதிபதி அண்மைக் காலத்தில் பல தடவை தெரிவித்திருக்கின்றார். இந்நாட்டில் உள்ள இந்தப் பிணக்கிற்கு சமாதானமான — நியாயமான — தீர்வு ஒன்றுக்கு தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதாக இருக்காது பல தசாப்தகாலமாக சிங்களவர்களின் பாகுபாடான அடக்குமுறை ஆட்சியாலேயே இந்தப் போராட்டம் எழுந்தது. தமிழர்களின் கிளர்ச்சிக்கு எதிராக படைப்பலத்தைப் பயன்படுத்துவது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்பதே எமது கருத்து.

### தமிழர் தாயகம்

இந்த நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் வடக்கு-கிழக்கில் நன்கு வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைக்குள்ளேயே புராதன காலம் முதல் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இந்த மக்கள் ஒரு புராதன பாரம்பரியத்தையும், உயிர்த்துடிப்பான ஒரு கலாசாரத்தையும் வாழும் மொழி ஒன்றையும் பொதுவாகக் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

1879 ஆம் ஆண்டு உரையில் சேர். ஹக்கிளெக்ஹோன் இதனை தெளிவாக - வெளிப்படையாகக் கூறுகிறார். இவர் பிரித்தானிய குடியேற்ற செயலாளராக கடமையாற்றியவர்.

''மிகவும் புராதன காலத்தில் இருந்து இரண்டு வித்தியாசமான நாடுகள் இந்தத் தீவைப் பிரித்து வைத்திருந்தன. சிங்களவர்கள் இதன் தெற்கு- மேற்குப் பகுதிகளில் வெல்லோவா ஆற்றிலிருந்து சிளாபம் வரைக்கும் இருந்தனர். மலாபர்கள் (தமிழர்கள்) வடக்கு-கிழக்கு பகுதிகளை வைத்திருந்தனர்.

இந்த இரண்டு நாடுகளும் அவற்றின் மதம், மொழி பழக்கவழக்கங்களில் முற்றாகவே மாறுபட்டிருந்தன.

பிரித்தானியர் இந்தத் தீவு முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முன்னர் 1833 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் தனித்தனியான ராஜ்யங்கள் இங்கு இருந்தன.

1833 ஆம் ஆண்டில்தான் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் முதற் தடவையாக ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர்.

பிரித்தானியர் வெளியேறிய பின்னர் 1948இல் சிங்களவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மறுத்தார்கள்.

இந்தப் பிறநாட்டுச் சிங்கள ஆதிக்கம் பெருந்தோட்ட தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தது சிங்களம் மட்டும் சட்ட மூலத்தைக் கொண்டு வந்தது. வேலைவாய்ப்புக் கொள்கைகளில் பாகுபாட்டைப் பிரயோகித்தது. தமிழ்ப் பகுதிகளுக்கு சமமற்ற முறையில் வளங்கள் பகிரப்பட்டன. உயர்கல்வி பல்கலைக்கழக அனுமதியிலிருந்து தமிழர்கள் நீக்கப்பட்டனர். 1958, 77, 83 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான இன ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளையில் தமிழர்களை அவர்களது தாயகப் பகுதிகளிலேயே சிறுபான்மையினராக்கும் நோக்குடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1946ஆம் ஆண்டில் 23 ஆயிரம் சிங்கள மக்கள் மட்டுமே கிழக்கு மாகாணத்தில் வசித்தார்கள். இது மொத்த சனத்தொகையில் 8.4 வீதமாகும். ஆனால் 1981 ஆம் ஆண்டில் இத்தொகை 2 லட்சத்து 34 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இது கிழக்கு மாகாண சனத்தொகையில் 25 வீதமாகும்,

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமிழர் தாயகம் உள்ளது என்பதற்கு மதிப்புக்கொடுத்து — தமது அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயிக்கும் உரிமை தமிழர்களுக்கு உள்ளது என்பதை அங்கீகரித்து —

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் ஐ. நா. செயலாளர் நாயகம் தனது நல்லெண்ண முயற்சிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் இராணுவ அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என மீண்டும் கோரியுள்ளனர்.

ஆனால் இலங்கை அரசு தமிழர்கள் மீதும், அவர்களது ஆயுதப்படைகள் மீதும் இராணுவ ரீதியான வெற்றி ஒன்றை நோக்கமாகக் கொண்டே தொடர்ந்து செயற்படுகின்றது.

மற்றவர்களுடன் சமம் என்ற தமிழர்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைப்பதுடன், தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை ஒடுக்கும் இலங்கை அரசின் முயற்சியைக் கண்டிக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாம் கோருகிறோம். (5)

## இசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், பெப். 21

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் பத்தாம் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

மிருதங்க இசை, பாட்டு, வீணை வயலினிசை, பரத நாட்டியம் ஆகியவை இன்றைய நிகழ்ச்சிகளில் இடம் பெறும்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடை பெறும். இன்றைய விழாவில் பிரதேசச் செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(த-111)

## இன்று

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையின் நாலைவாரமும் கொடி தினமும் இன்று முதல் எதிர் வரும் 25 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும். (த-90)

★ ★ ★

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு வானொலி நாடகம் பற்றிய ஆய்வரங்கு ஒன்று நடைபெற இருக்கிறது.

வானொலி நாடக எழுத்தாளர் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை ஆய்வுரையை நிகழ்த்துவார். (த-51)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், பெப். 21

நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் வைத்து இன்றும், நாளையும் எதிர்வரும் 24, 26 ஆகிய திகதிகளிலும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும்.

(த-162)

## ஆப்கானில் தொடரும் போர்; உணவு விநியோகத்தில் தடை

ஜெனிவா, பெப். 21

ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூலில் போட்டிக் கெரில்லாக் குழுக்களிடையே தொடர்ந்து நடந்து வரும் சண்டை காரணமாக அந்நகரின் உணவு விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் —

சண்டை நீடிக்கும் பட்சத்தில் நகரில் வாழும் 8 லட்சம் மக்களும் பட்டினிக்கு ஆளாகும் நிலை ஏற்படும் என்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் எச்சரித்துள்ளது.

இதே வேளை —

காபூலில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரபானிக்கு ஆதரவான படைகளும், பிரதமர் ஹெக்மதியாருக்கு ஆதரவான படைகளும் தளபதி ஜெனரல் தஸ்தமின் படைகளும் பரஸ்பரம் தாக்குதல்களில் ஈடுபட்டன. எழுபதுக்கு அதிகமான ரொக்கெட்டுக்களை மூன்று தரப்பினரும் ஏவினார்கள் என்றும் —

அதன் சேதவிவரங்கள் வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-எ)

## எமது சட்டங்கள் வடக்கு கிழக்கில் அமுலாவதில்லை

### சுதந்திரக் கட்சி எம். பி சொல்கிறார்

எமது சட்டங்கள் வடக்கு-கிழக்கில் அமுலாகாமல் இருப்பது பெரும் பிரச்சினையாகும். கடந்த 17 வருடங்களாக இந்த அரசு வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்க்க எதுவும் செய்யாதிருப்பதால் எமது சட்டங்கள் மதவாச்சிக்கு அப்பால் அமுலாவதில்லை.

நாடாளுமன்றில் இவ்வாறு கூறினார் சுதந்திரக் கட்சி எம். பியான மஹிந்த ராஜபக்ஷ.

பிரபாகரனின் சட்டமே வடக்கில் அமுலாகிறது. இனப்பிரச்சினையை பிச்சைக்காரனின் புண் போன்று சுகப்படுத்தாமல் வளர்க்க அரசு முற்பட்டுள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

(த-162)

## யாழ். திறந்த பல்கலையை இயங்க வைக்க நடவடிக்கை

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தை யாழ். பல்கலைக்கழகத்தின் உதவியுடன் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய நிலையத்துக்கு தேவையான பொருள்களை அனுப்புவதில் உள்ள சிக்கல் நிலையை யாழ். பல்கலைக்கழகம் [illegible] வும் - மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடவிதானம் போன்றவற்றை கப்பல் மூலம் அனுப்பவும் - நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்த மாதம் இங்கு வரவிருக்கும் திறந்த பல்கலைக் [illegible] விடயங்கள் குறித்து ஆராய [illegible]

## கைதடியில் சித்த மருத்துவ கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினரால் கைதடி வளாகத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை சித்தமருத்துவக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இன்று காலை 9 மணிக்கு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இக்கண்காட்சியில் நோய் மற்றும் சுகாதாரம் பேணும் விடயங்கள் இடம்பெற்றிருப்பதால் மாணவர்கள் பார்வையிட பாடசாலை அதிபர்கள் ஏற்பாடு செய்து கொடுக்குமாறு தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார். (ஓ)

## செப்ரீசீமியா; 20 நாட்களில் 11 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ் ஆஸ்பத்திரியில் கடந்த 20 நாட்களில் மட்டும் செப்ரீசீமியா நோயினால் 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

நேற்றும் ஆஸ்பத்திரியில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று மரணமானது.

நவாலி அரசடி அகதிமுகாம் ஒன்றைச் சேர்ந்த திருஞானம் சத்தினி என்ற குழந்தையே நேற்று மரணமடைந்தது.

(ஓ-15)

### யாழ்ப்பாணம்

## பிரதேச செயலர் பிரிவுக்கு ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ் பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 25 லட்சம் ரூபாவை கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு ஒதுக்கியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், வீடு அமைப்பு அதிகார சபை கல்வித் திணைக்களம் யாழ் கோட்டம் மாநகரசபை, சுகாதார திணைக்களம், கால்நடை வைத்தியா பிரிவு நீர்ப்பாசன திணைக்களம், மின்பிடி திணைக்களம், தேசிய அபிவிருத்தி அதிகார சபை, யாழ் பிரதேச செயலகம் போன்றவற்றிற்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டங்கள் மாவட்ட இணைப்புக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுக்கு யாழ் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் அனுமதி கிடைத்ததும் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-17)

### தமிழகத்திலிருந்து

## அகதிகளை விமான மூலம் அனுப்ப ஆலோசனை!

கொழும்பு, பெப். 21

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை விமான மூலமும் திருப்பி அனுப்புவது குறித்து இந்திய அரசு சிந்தித்து வருகிறது.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் தற்போதைய நடைமுறையின்படி கப்பல் மூலம் ஆறு தடவைகள் மட்டுமே தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் 120 ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பத் தயாராகும் போது அவர்களை விமான மூலம் அனுப்புதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளும்.

ஆனால் விமான மூலம் கொண்டு செல்லப்படும் பொருள்களின் நிறை வரையறுக்கப்பட்டதாக இருப்பதே தற்போதுள்ள முக்கிய பிரச்சினை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இந்து பத்திரிகை வெளியிட்டுள்ளது.

(த-162-5)

வீதியோரம் மரம் நடுவோம்
விழி போலக் காத்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஐயாத்துரை இலட்சுமிப்பிள்ளை

(இலட்சுமி கடை உரிமையாளர், காங்கேசன்துறை)

காலஞ்சென்ற ஐயாத்துரையின் மனைவியும், இலட்சுமிகடை உரிமையாளருமாகிய இலட்சுமிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புத் தாயாரும், காலம் சென்ற மருதினின் (புகையிரத பாதுகாவலர்) அன்பு மாமியும், கலைச்செல்வி, ஜீவராஜ், கலையமுதா, ஜீவானந்தன், கலைவாணி, கோகிலன், கோமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-02-94) முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. கனகாம்பிகை
(மகள்)

145/16 நாவலர் வீதி,
(குமரன் படிப்பகம் அருகில்)
ஐந்து சந்தி, நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.
(29551)

### திருமதி பாக்கியலட்சுமி மயில்வாகனம்

(ராசு)

மானிப்பாய் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாக கொண்ட பாக்கியலட்சுமி மயில்வாகனம் 20-02-94 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் மகேந்திரன், குகேந்திரன், இந்துமதி, இரதிமதி ஆகியோரின் தாயாரும் சரோஜினி, இராஜேஸ்வரி நாகராஜா, புவனேந்திரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ''தேவிவாசா'' தியேட்டர் ஒழுங்கை, இணுவிலில் பகல் 2 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
நா. இந்துமதி
(மகள்)
(7009)

### எம். எஸ். சுந்தரலிங்கம்

(சட்டத்தரணி)

புலோலி தெற்கைச்சேர்ந்த எம். எஸ். சுந்தரலிங்கம் சட்டத்தரணி காலமானார்.

அன்னார் பஞ்சலிங்கம் (சட்டத்தரணி), மகாலிங்கம் (பொறியியலாளர், இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வராஜன் (ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி), செல்வகுமார் (இன்ஸ்ரக்டர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினியின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இன்று (21-2-94) பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி பஞ்சலிங்கம்
(சகோதரன்)

126, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(29554)

### யோகாம்பிகை சிவநேசன்

திருமதி யோகாம்பிகை சிவநேசன் 19-2-94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சிவநேசனின் அன்பு மனைவியும், சுபேந்திரனின் (Ruhlins Company) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு திருமதி பஞ்சாட்சரத்தின் மகளும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நேற்று [20-02-94] அன்று கொழும்பில் நடைபெற்றன உறவினர், நண்பர்கள் இவ்வறித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சுபேந்திரன்
(மகன்)

11/4, சந்தனமாதா ஒழுங்கை,
சுண்டிக்குளி.
[29558]

### வேலுப்பிள்ளை பொன்னுத்துரை

மானிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மத்தியை வசிப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறியவருமான வேலுப்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள் 16-02-1994 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை (குமார கோவில், மானிட்டபுரம்) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சம்பிப்பிள்ளை - அன்னம்மாவின் அன்பு மருமகனும், இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை (திருகோணமலை), காலஞ்சென்ற முருகுப்பிள்ளை (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr வேதானந்தநாயகி, கிருஷ்ணானந்தன் (பொறியியலாளர்), யுசிவானந்தன் (பொறியியலாளர்), ருசிதநாயகி, குமாரானந்தன், சசிகலா (D.D. I's அலுவலகம், வவுனியா), சிவபதமினி சண்முகானந்தன், சர்வானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரன் (கனடா) Dr நந்தினி Dr கயல்விழி, கணேசலிங்கம் (Lanka Cement Ltd ) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரீந்திரா, சிவேந்திரா, நிஷாந், தனுயா, பவனா, மிதுஷா, பிரஷாந், நிஷாந் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு இன்று (21-02-1994) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

தகவல்:
பொ. கிருஷ்ணானந்தன்
(மகன்)

சுதுமலை மத்தி,
மானிப்பாய்
(29557)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வெட்டுப்புள்ளி விவரம் மார்ச் முதல் வாரத்தில்

## இரு துறைகளுக்கு ஒக்டோபரில் வகுப்பு

1992 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி எய்தியவர்களை பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் எதிர்பார்க்கப்பட்டது போல இம்மாத மத்தியில் வெளியிடப்படவில்லை. அனேகமாக மார்ச் மாதம் முதல் வாரத்திலேயே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

பிரஸ்தாப பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாகும் வைத்திய, பொறியியல் துறை மாணவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பமாக இருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏனைய துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான வகுப்புகள் அடுத்த வருடம் ஜனவரி நடுப்பகுதியில் ஆரம்பமாகவிருக்கின்றன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஒக்டோபரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு ஆயிரத்து 443 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் — அவர் கூறினார்.

ஒக்டோபர் மாதம் தொடக்கவிருக்கும் மருத்துவ, பொறியியல் பீட மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் எதிர்வரும் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. (அ-3-162)

# ஆயுதகொள்வனவில் கமிஷன் பூரண விசாரணை வேண்டும்

## படையினர் கோரிக்கை

கொழும்பு, பெப் 21

கடந்த 10 ஆண்டு காலத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவின் போது இடைத்தரகர்களினால் பெறப்பட்டதாகக் கூறப்படும் கமிஷன் விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்றகோரிக்கை ஆயுதப்படையினர் மத்தியில் எழுந்துள்ளதாக கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்தத்திற்கு ஒவ்வாத யுத்த தளபாடங்கள், உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்ய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவது அவசியம் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் கவனம் இந்த விடயம் குறித்து திரும்பியிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த 163)

# கைதான மகனைத் தேடிச் சென்ற வயோதிபப் பெற்றோரும் கொழும்பில் கைதாகினர்

கொழும்பு, பெப். 21

கொழும்பில் படையினரால் கைது செய்யப்பட்ட மகனைப் பார்க்கச் சென்ற வயோதிபப் பெற்றோரை படையினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்த நாகண்ட போடி (வயது 80), அவரது மனைவியான அழகக்கா (வயது 70) ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களது மகன் கொழும்பு மலைசார மாவத்தையில் உள்ள பாதுகாப்பு ஒன்றிணைப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து அவரைப் பார்ப்பதற்காக தள்ளாத வயதிலும் அவரின் பெற்றோர் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு சென்று விசாரித்ததாகவும் —

படையினர் அவர்களையும் கைது செய்து நாகண்ட போடியை புதிய மகஸின் சிறைச்சாலையிலும், அவரது மனைவியை வெலிக்கடை சிறைச்சாலையிலும் தடுத்து வைத்துள்ளதாகவும் —

சட்டத்தரணி ஒருவர் மனித உரிமைகள் செயலணிக் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் —

இவர்களைத் தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது எனவும் —

இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் — அவர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (உ-3)

பாக் தூதுக...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லாமல் அவருக்கு விசாவை வழங்கக்கூடாது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் கொழும்பில் உள்ள ஏஜென்ஸிகள் ஊடாக மோசடியான விசாக்களைப் பெற்றுக் கொண்டு ஆப்கானிஸ் தானியர் குழு ஒன்று சென்னைக்கு சென்றுள்ளது என்றும் —

இந்தியாவுக்கு வர விரும்புவோருக்கு போலி பாஸ்போட்டுகளையும், விஸாக்களையும் விநியோகிக்கும் ஏஜென்ஸிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தீவிரப்படுத்துமாறு இலங்கை வெளியுறவு அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது எனவும் ''இந்து'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (உ-5-162)

தெற்கு.
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய பொருள்களான அரிசி மாவு, சீனி, பருப்பு, பாம்மா உட்பட ஏனைய பொருள்களுக்கு மேலதிகமாக விலையைக் கூட்டி அரசு விற்பனை செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் உணவுத் தேவைக்குப் பொறுப்பாகவிருக்கும் அரச அதிபரும் உணவு விநியோகத்தை மேற்கொள்ளும் திட்டப்பணிப்பாளரும் இது சம்பந்தமாக அரசுக்கு வலியுறுத்தி ஆவன செய்யுமாறு யாழ். மாவட்ட வெகுஜன அ[illegible] ஒன்றியம் கே[illegible]து — என்றுள்ளது. (அ)

இலங்கை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களினால் பதிக்கும் அதிகமான இந்திய மீனவர்கள் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் ஒவ்வொரு முறை இடம் பெறும் போதும் இந்திய அரசு அது குறித்து இலங்கை அரசிடம் கடும் ஆட்சேபம் தெரிவிப்பதும் —

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாது என ஒவ்வொரு முறையும் இலங்கை அரசு உறுதியளிப்பதும் தெரிந்தவையே

மீண்டும் இத்தகைய சம்பவம் இடம் பெற்றிருப்பது இந்திய அரசை கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது

மீண்டும் சூட்டுச் சம்பவம் இடம்பெறாது என இந்திய அரசு உறுதிமொழி பெற்றுத் தந்திருக்கும்போது —

இத்தகைய சூட்டுச் சம்பவம் தொடர்ந்து இடம்பெற்றிருப்பது மத்தியில் ஆட்சியில் இருக்கும் இந்திரா காங்கிரஸ் அரசுக்கு தமிழக மக்கள் முன்னிலையிலும் தமிழக மாநில அரசின் முன்னிலையிலும் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தவறிழைத்த கடற்படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இந்தியா இலங்கையை வற்புறுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருதரப்பு உறவில் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தணிக்கும் முயற்சியில் கொழும்பில் [illegible] முழுமூச்சாக [illegible] டது. (உ-3)

# உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு அதிரடிப் படையினரும் அம்பாறையில் பாதுகாப்பு

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு அம்பாறைப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. நாளுக்கு நாள் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கை அதிகரித்துள்ளது:

குறிப்பாக அம்பாறை பிரதான வீதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூடுதலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அதே வேளையில், விசேட அதிரடிப் படையினரையும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, மல்வத்தைப் பகுதியில் முகாமிட்டுள்ள விசேட அதிரப் படையினர் அப்பகுதியில் சோதனை நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## 5 வள்ளங்கள் சேதமாகின

யாழ்ப்பாணம், பெப். 21

அராலி, தொட்டைக்காடு கடற்பிராந்தியத்தில் — வேலணைக் கரையை அண்டிய பக்கமாக — கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களின் வள்ளங்களை நோக்கி, வேலணை அராலித்துறையில் நிலைகொண்டுள்ள இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் வள்ளத்தில் இருந்தவர்களில் ஒருவர் வயிற்றில் படுகாயமடைந்தார். ஐந்து வள்ளங்கள் சேதமடைந்தன.

நேற்று இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த கந்தசாமி காந்தன் (வயது 13) என்ற சிறுவனே காயமடைந்தான். காயமுற்ற சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-15)

## ஆசிரியர்களுக்கு உளவளத்துறை பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில், உளவளம் பாதிக்கப்பட்டவர்களை சீராக்கும் முயற்சியாக பாடசாலை ஆசிரியர்களுக்கு உளவள துணைப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் படி மாணவர்கள் பயம், பீதி போன்றவற்றால் பெருமளவில் பாதிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் —

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உளவளத்துணை பயிற்சி அளிப்பதற்காக பாடசாலை அதிபர்களுக்கும், மற்றும் ஓர் ஆசிரியருக்கும் தற்சமயம் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் —

விரைவில் அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பர் என்றும் — கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-3)

## நாளை

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழா கொண்டாடப்படவிருக்கிறது.

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாசிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ருபானந்தா பரமஹம்சரைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்துவார். திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தினரின் வீரத்துறவி விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றின் வில்லிசை நிகழ்ச்சியும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் இடம் பெறவிருக்கின்றன. (ஒ-69)

ஜனாதிபதி--
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு முக்கிய பதவி — ஜனாதிபதிக்கு நெருக்கமான பதவி — வழங்கப்படுவது சிறிசேனகூரேயுக்குப் பேரிடியாக இருக்கும். சிறிசேனகூரேயினதும், பிரேமதாஸா ஆதரவாளர்களினதும் தலைவராகச் செயற்படும் பிரதமர் ரணிலுக்கும் அது எரிச்சலைத் தருவதாக இருக்கும்.

இவ்வாறு விக்ரர்ஐவன் மேலும் தெரிவித்தார். (உ-6)

## புதிய முகாம்

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்தில் கடந்த 9 ஆம் திகதியன்று இரு புதிய இராணுவ முகாம்களை படையினர் அமைத்தனர்.

தாண்டமலைப் பிள்ளையார் கோயிலிலும் படையினர் தமது நிலைகளை அமைத்துள்ளனர் என்றும் —

பஞ்சேனைப் பகுதியில் புதிய முகாம் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அறிவித்தல்

**22-02-1994 முதல் பாண் ரூபா 9/-**

கப்பல் கட்டணத்தை பொருள்கள் கொள்வனவு செய்வோரே பொறுப்பேற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் இன்றிலிருந்து மாவின் விலை கிலோ ஒன்றிற்கு ரூபா 4/- வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே நாளை செவ்வாய்க்கிழமை 22-2-1994 முதல் 350 கிறாம் பாணின் விலை ரூபா 9/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

விலை நிறை தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

183, ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
[29553]


## எமது புதிய வெளியீடு

**சுப்பிரமணிய சுவாமி**

✻ பாண்டியராஜன் ✻ ஊர்வசி

பழைய, புதிய பாடல்கள் சிறந்த முறையில் பதிவு செய்து தரப்படும். புதிய பாடல்கள் கொம்பக்ற் டிஸ்க்கிலிருந்து பதிவு செய்து தரப்படும்.

**மாருதி வீடியோ விஷன்**

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(29555)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம்

(நயினாதீவு)

நயினை 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம் 13-02-94 இல் நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற சரவணமுத்து இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பண்டிதை புனிதவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திலகவதி, காலஞ்சென்ற மகாதேவா (P.W.D), மகேஸ்வரன் (ASBESTOS LTD சுவினை], துளசிவேணி (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியமணி ஓய்வுபெற்ற ஆசிரியை), பாலசுந்தரம், (ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி), காலஞ்சென்ற யோகலிங்கம் (விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்), வசந்தா, விசாலாட்சி (அதிபர். சேர் துரைசுவாமி வித்தியாலயம், புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தவவல்
இ மகேஸ்வரன்
(மகன்)

பிரபாகரன் ஒழுங்கை.
கோப்பாய் தெற்கு
(29556]

### திருமதி சாந்தம்மா நாகலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புதிய செம்மணி வீதி வேளாதோப்பு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சாந்தம்மா நாகலிங்கம் 20-02-94 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வைரமுத்து நாகலிங்கம் (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், தங்கராசா (அஞ்சலதிபர், தபாலகம், புங்குடுதீவு), மகேஸ்வரி, ராணியம்மா, கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி (ஆசிரியை, வேலணை பிரதேசசபை), உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சரவணமுத்து (ஓய்வு பெற்ற தலைமை லிகிதர்) காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னம்மா, நமசிவாயம் (ஆசிரியர்), தம்பியையா (ஆசிரியர்), சின்னத்துரை, அருணாசலம் மற்றும் இராமாசிப்பிள்ளை, காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவரூபன், நந்தரூபன், கீதலதா, ஹேமலதா, தினேஸ்குமார், சசிகுமார், உஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-02-94) திங்கள் காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. தங்கராசா
(மகன்)

இலங்கை நாயகி அம்மன்
கோயில் முன்பாக,
புதிய செம்மணி வீதி,
வேளா தோப்பு,
கல்வியங்காடு.
(29559)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org